**செய்தி வெளியீடு எண்: 145** **நாள்:21.02.2021**

# செய்தி வெளியீடு

'உலகத் தாய்மொழி நாள்' யுனஸ்கோ நிறுவனத்தால் 1999–ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 21–ஆம் நாளை உலகத் தாய்மொழி நாளாகக் கொண்டாடப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டு, உலகெங்கிலும் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில், உலகின் மூத்த மொழியாகிய தமிழ் மொழியின் சிறப்பை இனிவரும் இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் உயரிய நோக்கில் மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2013–2014 ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் போது **'உலகத் தாய்மொழி நாள்'** ஒவ்வோர் ஆண்டும் மாநில அளவில் கவியரங்கம், கருத்தரங்கம் நடத்திக் கொண்டாட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதற்கிணங்க, ஒவ்வோர் ஆண்டும் உலகத் தாய்மொழி நாள் தமிழ் வளர்ச்சித் துறையால் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் உலகத் தாய்மொழி நாள் 21.02.2021ஆம் நாளன்று சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் காலை 9.00 மணி முதல் 6.00 மணி வரை கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின் தொடக்கமாக அரசு இசைக் கல்லூரி மாணவர்கள் மங்கல இசை நிகழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து தஞ்சைக் கருங்குயில் கணேசன் குழுவினரின் நாட்டுப்புறப் பாடலிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் வரவேற்புரையாற்றியும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராசன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றியும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராசன் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார். அவர்தம் விழாப் பேருரையில் உலகளவில் நம் தமிழ்மொழி 14 ஆவது இடத்தில் உள்ளதை, 10ஆவது இடத்திற்குள் கொண்டு வருவதற்குத் தமிழ்நாடு அரசு, வளர்தமிழ் மையம், தமிழ்ப் பண்பாட்டு மையம், சொற்குவை போன்ற திட்டங்களைச் செயற்படுத்தி வருவதையும் சிங்கப்பூரில் தற்போது தமிழ் கற்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் குறிப்பிட்டார்கள். அதனைத் தொடர்ந்து சென்னை, டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மருத்துவர் சுதா சேஷய்யன் அவர்கள் தாய் மொழி நாளுரையில் ''குழந்தை, கருவில் இருக்கும்போதும் பிறந்தவுடனும் மூளையில் எந்தமொழியைப் பதிவு செய்கிறதோ அதுவே அக்குழந்தையின் தாய்மொழியாக அமைகிறது என்றும், மேலும் 3 முதல் 4 வயது வரையிலான குழந்தைப் பருவத்தில் எந்த மொழியை மூளையில் பதிவு செய்து கொள்கிறதோ அந்த மொழியே சிந்தனை மொழியாக அமைகிறது. மேலும், ஒருவர் தாய்மொழியை

முழுமையாகக் கற்றால் மட்டுமே பிற மொழிகளைக் கற்கும்போது அதன் உண்மையான உட்பொருளை அறிந்து கொள்ள இயலும்'' என்று குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து ''தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்'' என்ற தலைப்பில் கவிஞர் கலைமாமணி பூவை செங்குட்டுவன் அவர்களின் தலைமையில் கம்பன் புகழ்பாடி முனைவர் பாலரமணி அவர்களின் முன்னிலையில் கவியரங்கம் நடைபெற்றது. இக்கவியரங்கத்தில் பாவரசு மா. பாரதிசுகுமாரன், கவிஞர் கருமலைத் தமிழாழன், கவிஞர் முனைவர் ஈ. விசய் ஆகியோர் பங்கேற்றுக் கவிபாடினர்.

மேலும் பிற்பகலில் ''பொங்கு தமிழைப் பேச மறுப்பேனா?'' என்ற தலைப்பில் திரு. அறிவுமதி (எ) மதியழகன் அவர்களின் தலைமையில், கலைமாமணி ஏர்வாடி சு. இராதாகிருட்டிணன் அவர்கள் முன்னிலையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் திரு. ஆவடிக்குமார், கவிஞர் இதயகீதம் இராமானுசம், திரு. பழ. பாசுகரன், திரு. கோ. மணி ஆகியோர் பங்கேற்றுக் கருத்துரை வழங்கினர்.

மேலும் இதனையடுத்து, இளந்தமிழர் இலக்கியப் பட்டறை மாணவர்கள் பங்கேற்ற 'வளர்தமிழ் அரங்கம்' நடைபெற்றது. இக்கருத்தரங்கத்தில், செல்வன் சட்டம் மு. முனீசுவரன் அவர்கள் தலைமையேற்றார். மருத்துவர் அன்புச் செல்வன் திருமார்பன் அவர்கள் முன்னிலை வகித்தார். 'இயற்றமிழ்' என்ற தலைப்பில் செல்வன் சீ.வே. கார்த்திக் அவர்களும் 'இசைத்தமிழ்' என்ற தலைப்பில் திருமதி செ. வினோதினி அவர்களும், 'நாடகத்தமிழ்' என்ற தலைப்பில் செல்வி மெ. சிவநந்தினி அவர்களும், 'ஆட்சித்தமிழ்' என்ற தலைப்பில் திரு. இர. இராகுல் அவர்களும், 'அறிவியல் தமிழ்' என்ற தலைப்பில் செல்வன் ந. இனியன் அவர்களும் எழுச்சிமிகு உரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியின் முடிவில் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திருமதி அ. புவனேசுவரி அவர்கள் நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சி நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.

**தமிழ் வளர்ச்சி இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**